# 22-ம் தேதி காலை 4.30 முதல் மெட்ரோ ரயில்கள் இயக்கம்

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மீனம்பாக்கம் ஏ.எம்.ஜெயின் கல்லூரியில் வரும் 22-ம் தேதி யோகா நிகழ்ச்சி நடக்கவுள்ளது. எனவே, பொதுமக்களின் வசதிக்காக மெட்ரோ ரயில்களின் சேவையை அதிகாலை முதல் இயக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. எனவே, பொதுமக்கள் இந்த யோகா நிகழ்வுக்கு சென்று, வர வசதியாக வரும் 22-ம் தேதி (ஞாயிறு) மட்டும் அதிகாலை 4.30 மணிக்கே மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.